R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Publication On 10th of Every Month Licensed to Post Without Pre-Payment
below the Registration No. TN/WPP-169/SR/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Every Month 2017 July 2017

இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்செய்தீர்களோ...
மத்தேயு 25:40



வத்தலக்குண்டு
கிறிஸ்துவின் சபையாரின் அன்னதான நிகழ்ச்சி

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M
&
Our TV Program: Nambikkai TV Every Monday & Saturday 7.30 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

To

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 17 ஜூலை 2017 கனி 8

## Let us not be weary in well doing - Galatians 6:9



நன்மைசெய்கிறதில் சோர்ந்து
போகாமல் இருப்போமாக – கலாத்தியர் 6:9

THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

## World Evangelism
## Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 31 meter band of Sri Lanka Radio. *(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*


**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Nambikkai TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 31 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile:09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m. Every day at 7.30 and 3.30 .m. on Kanthi TV in A.P Only.
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஊழியங்கள்



வேலூர் மாவட்டம்



சென்னை மாவட்டம்



கேரளாஇடுக்கி மாவட்டம்

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 203

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. மோசே முந்தின பிரகாரமாகவே நாற்பது நாள் இரவும் பகலும் மலையில் இருந்தாரா?
2. இளவயதுள்ள விதவைகளை விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாமா?
3. தேவனுடைய பெட்டி பிடிபட்டுப்போனபடியினால் மகிமை இஸ்ரவேலை விட்டு விலகிப்போயிற்று என்றவள் யார்?
4. இயேசு கிறிஸ்து புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரா?
5. எந்த மனுஷரோடு யுத்தம் செய்யும்போது இஸ்ரவேல் ஜனங்களின் இருதயம் கரைந்து தண்ணீராய்ப்போயிற்று?
6. சிதறியிருக்கிற பன்னிரெண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதப்பட்ட நிருபம் எது?
7. உமது அடியேனாகிய நான் இனி ராஜாவாகிய என் ஆண்டவனுக்குப் பாரமாயிருக்கவேண்டியது என்ன? என்று சொன்ன கீலேயாத்தியன் யார்?
8. அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல ஒருவருக்கொருவர் என்ன செய்யவேண்டும்?
9. பத்து அப்பங்களையும், பணியாரங்களையும், ஒரு கலசம் தேனையும் எடுத்துக்கொண்டு தீர்க்கதரிசியாகிய அகியாவை சந்திக்கப்போன பெண் யார்?
10. எந்த அப்போஸ்தலன் தமது நிருபத்தில் நாய் மற்றும் பன்றியை சொல்லி மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது என எழுதுகிறார்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**
ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் அறிமுகம் செய்யவும். நன்றி. - ஆசிரியர்

## இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

21

நாள்: 15.07.2017 சனிக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: E. பீட்டர் கிருபாகரன், இவ்விதழின் வாசகர்
3/196. புதூர்
தங்கச்சிமடம் - 623 529
ராமநாதபுரம் மாவட்டம்
தொடர்புக்கு: 9489318331






சிறுவர் பகுதி

## இரண்டாவது முறையாக விற்கப்பட்டவன்

*வேதபகுதி: ஆதியாகமம் 37:1-39:5*



யோசேப்பு தன் சகோதரர்களாலே மீதியானியரிடத்தில் 20 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். அவர்கள் அவனை எகிப்திற்குக் கொண்டு போனார்கள். அவனுக்குத்தான் எவ்வளவு மனக்கஷ்டம் இருந்திருக்கும். தன் குடும்பம், இடம், நண்பர்கள், உறவினர்கள் எல்லாவற்றையும் இழந்தவனாக மீதியானியரின் கையில் ஒரு கைப்பொம்மையாக அவர்களோடு இருந்தான். அவனுக்கு துன்மார்க்கமான செயல் பிடிக்காது. ஆகையால் 17 வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் போது தன் சகோதரர்களுடைய துன்மார்க்கத்தை தன் தகப்பனுக்குச் சொல்லிவருவான். அவன் தகப்பனாகிய யாக்கோபோ முதிர் வயதிலே யோசேப்பு தனக்குப் பிறந்ததினால் தன் பிள்ளைகள் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்து அவனுக்குப் பலவருணமான அங்கிகளை செய்து உடுத்துவான். இதையெல்லாம் கண்ட அவன் சகோதரர்கள் அவன்மீது பொறாமை கொண்டு அவனை தூக்கி விற்றுப்போட்டார்கள்.

தங்களுடைய தவறை மறைக்க ஒரு வெள்ளாட்டு கடாவை அடித்து, யோசேப்பின் அங்கியை இரத்தத்தில் தோய்த்து தங்களுடைய தகப்பனிடத்துக்கு அனுப்பி இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உம்முடைய குமாரன் அங்கியோ அல்லவோ பாரும் என்று சொல்லச்சொன்னார்கள். யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது, என்று புலம்பினான். அந்த மீதியானியரோ யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள். முதலாவது தன் சகோதரர்கள் அவனை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். பின்பு அந்த மீதியானியர் போத்திபாருக்கு விற்றுப்போட்டார்கள். இதை கண்ட யோசேப்பு எப்படி மனங்கசந்து அழுதிருப்பான் என்பதை சற்று தியானித்துப்பாருங்கள். கர்த்தர் அவனோடு இருந்தபடியால் அவன் எகிப்து தேசத்திலே உயர்த்தப்பட்டான்.

அப்படியே உங்களோடும் கர்த்தர் இருக்க நீங்கள் விரும்பினால் இந்த யோசேப்பைப் போல துன்மார்க்கத்துக்கு விலகி நலமான காரியத்தைச் செய்யுங்கள். கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது. உங்கள் நிமித்தம் உங்களுடைய தேசம், உங்களுடைய வீடு ஆசீர்வதிக்கப்பட யோசேப்பைப் போல மாறுங்கள்.

**மனப்பாட வசனம்:** **“வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால்தானே”** – சங்.119:9




# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
## THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 17 ஜூலை -2017 கனி - 8


ஆசிரியருரை

## துக்கம் – Sorrow



வேதாகமம் இரண்டு விதமான துக்கத்தைப் பற்றி பேசுகிறது. இதைக்குறித்து பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபம் 7:9-ம் வசனத்தில் படிக்கிறோம். "இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே". ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவகையில் துக்கம் வருகிறது. இங்கே பவுல் சொல்லுகிற துக்கம் தேவனுக்கேற்ற துக்கம். இந்த துக்கம் மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. இந்த விதமான துக்கத்தை அநுபவியாமல் உல்லாசமாக அநேகர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தரைப் பற்றியும், அவருடைய வசனங்களைப்பற்றியும் கவலையில்லை. அநுதினமும் குடித்து, கும்மாளமிட்டு உல்லாசமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தேவனுக்கேற்ற துக்கமுடையவர்கள் அழிந்து போகிற ஆத்துமாவைக்குறித்து கவலையுள்ளவர்களாகவும், அவர்கள் மனந்திரும்பவேண்டியும் துக்கமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆதியிலே தேவன் மனிதனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார் அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது என ஆதியாகமம் 6:6-ல் வாசிக்கிறோம்.

ஏன் இந்தவிதமாக தேவன் மனஸ்தாபப்பட்டார் என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது. அப்பொழுதிருந்த ஜனங்கள் தங்களை கெடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆகையால் அது அவருடைய இருதயத்துக்கு விசனமாயிருந்தது. இந்த சிந்தையுடையவர்கள் இப்பூமியில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பொல்லாதவர்களைப் பார்க்கும்போது அவர்களுக்கு அது மிகவும் வருத்தமாயிருக்கும். ஒரு பாவி மனந்திரும்பும்போது அது எவ்வளவு சந்தோஷத்தைக்கொண்டுவரும்! அதையே வேதாகமமானது எதிர்பார்க்கிறது. ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல எல்லோரும் மனந்திரும்பவேண்டுமென்று தேவன் நீடியபொறுமையாயிருக்கிறார். ஒரு மனிதன் தேவனுக்கேற்ற துக்கமடையும்போது; "மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது" (2கொ.7:10). ஐயோ! நான் தேவனுக்கு விரோதமாக இப்படி வாழ்ந்துவிட்டேனே, என்று சொல்லி அவன்

மனந்திரும்பும்போது அவனுடைய வாழ்க்கையில் இரட்சிப்பை உண்டாக்குகிறதல்லவா, அதையே பவுல் இங்கு உணர்த்தும்போது, இங்கே அவன் மனஸ்தாபப்படவேண்டிய அவசியமில்லை, ஒருபொருளை இழந்தால் அவன் மனஸ்தாபப்படவேண்டும் அல்லது ஒருவருக்கு விரோதமாக நடந்துவிட்டால் அவன் மனஸ்தாபப்படவேண்டும். அறியாமையால் ஒரு காரியத்தை செய்துவிட்டால் மனஸ்தாபப்படவேண்டும். தேவனுக்குகேற்ற துக்கம் அவனுடைய வாழ்க்கையில் ஆத்தும இரட்சிப்பைக்கொண்டு வந்திருக்கும்போது அவன் மனஸ்தாபப் படவேண்டிய அவசியமில்லை. இது குறித்து பவுல் மேலும் சொல்லும்போது; "பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணீர்கள்" என்கிறார் (2கொரி.2:11). ஒருவர் மனந்திரும்பும்போது இவ்வளவு காரியங்கள் நடைபெறுகிறது. இப்படிப்பட்டதான தேவனுக்கேற்ற துக்கம் உண்டாகவேண்டும். அப்பொழுதே இரட்சிப்பு உண்டாகுமென்று காண்கிறோம்.


நினிவேயின் மக்கள் தேவனுக்கு விரோதமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு யோனா தீர்க்கதரிசியின் மூலம் ஒரு எச்சரிப்பைக் கொடுத்தார். நினிவேயுக்கு விரோதமாக பிரசங்கி என்றார். அந்தப்படியாக அவன் பிரசங்கித்தபோது, அந்த ஜனங்கள் மனந்திரும்பினார்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்தனர்; "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்" (யோனா3:10). அவர்களோ காப்பாற்றப்பட்டார்கள். ஒருவேளை அவர்கள் வருவது வரட்டும் யார் என்ன சொன்னாலும் நாங்கள் எங்களுடைய பொல்லாத வழியைவிட்டு மனந்திரும்ப மாட்டோம் என்று சொல்லி தேவனுக்கேற்ற துக்கங்கொள்ளாதிருந்திருப்பார்களே யானால் நிச்சயமாக சோதோம், கோமோரா பட்டணங்களை அழித்த கர்த்தர் நினிவே பட்டணத்தையும் அழித்துப்போட்டிருப்பார். அவர்களோ தேவனால் அனுப்பப்பட்ட யோனாவின் எச்சரிப்புக்கு ஒவ்வொருவரும் கீழ்ப்படிந்து ஒன்றும் புசியாமலும், குடியாமலும் இருந்து இரட்டினால் தங்களை மூடிக்கொண்டு உபவாசம் பண்ணி தங்களுடைய பாவங்களை விட்டு மனந்திரும்பினார்கள். ஆகையால் அவர்களுக்கு இரட்சிப்பு கிடைத்தது. அந்நாட்டு ராஜாவும் அதற்கு இசைவாய் தான் உடுத்தியிருந்த உடுப்பை கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும் மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள் யாருக்குத் தெரியும்; நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிரகோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான். அந்தப்படியாக நினிவேயின் மக்கள் மனந்திரும்பியபோது அவர்களும் அவளுடைய மிருகங்களும் அந்தப் பட்டணமும் காக்கப்பட்டது. இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு வானொலி நேயரே! நீங்கள் தேவனுக்கேற்ற துக்கம் கொண்டதுண்டா? நீங்கள் எப்படி



பாடம் - 24

## The New Birth - புதிய பிறப்பு - *Jerry Bates*

### பாடம் - 24-ன் தொடர்ச்சி




3. இது ஏதோ இயேசுவை உன்னுடைய தனிப்பட்ட இரட்சகராக ஏற்றுக்கொள்ளுவது கிடையாது.

இந்தப் புதிய வாழ்க்கையின் இரண்டு முக்கியமான தேவைகள்.

ஆவியினால் பிறப்பது.

1. "மறுபடியும்" என்று சொல்லப்படும் சுலோகத்தை மேலே உள்ளதையும் அர்த்தம் கொள்ளலாம். இரண்டு அர்த்தங்களுமே புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

2. ஆவிக்குரிய பிறப்பு என்பது தேவனால் அவருடைய வார் த்தையின் மூலம் கொண்டுவரப்படும் வாழ்க்கை மாற்றம். 1பேது.1:23-ல் அழிவுள்ள வித்தினாலே அல்ல என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லா வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டீர்களே!

3. தேவனால் பிறப்பது (யோவான் 1:12,13)

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்.

நம்முடைய சொந்த முயற்சியினால் நாம் பிறந்தவர்களல்ல.

தண்ணீரினால் பிறப்பது ஒரு பூமிக்குரிய பிறப்புக்கு இடம் மற்றும் உறவில் மாற்றம் வேண்டும். சிலர் தண்ணீர் சரீரப்பிரகாரமான பிறப்பென்று நினைக்கின்றனர். அப்படி அது உண்மையானால் ஏன் குறிப்பிடவேண்டும். ஒவ்வொருவரும் மாம்சப்பிரகாரமாக பிறந்திருக்கிறார்கள்.

2. ஆவிக்குரிய பிறப்பென்பது குறிப்பிட்ட இடத்திலும் உறவிலும் மாற்றம்வேண்டும். (கொலோ.1:13)

இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறேன்.

3. புதிய ஏற்பாட்டில், ஒரே ஒரு இடத்தில்தான் தண்ணீர் ஆவிக்குரிய பிறப்போடு இணைக்கப்படுகிறது. ஞானஸ்நானத்தில் ஞானஸ்நானம் விடுதலையின் எல்லையென்று வேதம் குறிப்பிடுகிறது.

4. நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் தம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறு ஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத்து 3:5).

5. ஒருவன் தண்ணீரினால் பிறக்காவிட்டால் ஆவியினாலும் பிறக்க முடியாது. ஏனென்றால் இரண்டுமே புதிய பிறவியில் ஈடுபட்டுள்ளன. புதிய பிறப்பில் தண்ணீர் தேவையில்லையென்றால் இயேசுவானவர் ஏன் இதை இங்கே குறிப்பிடவேண்டும்.

அநேகர் ஞானஸ்நானத்தை மனிதனுடைய வேலை என்று எண்ணுகின்றனர் எனவே இரட்சிப்பில் அதற்கென்று பங்கில்லை என்று நினைக்கின்றனர்.

குறித்து நமக்கு சொல்கின்றன.

9. எந்த புத்தகம் கர்த்தருடைய குடும்பமாகிய சபையைக் குறித்து சொல்லுகிறது?

10. புதிய ஏற்பாட்டின் எத்தனை புத்தகங்கள் பிரதானமாக கிறிஸ்தவர்களின் வளர்ச்சிக்காக எழுதப்பட்டன?

11. வேதாகமத்தைபடிக்கும் பொழுது பின்பற்றவேண்டிய ஏழு குறிப்புகளை வரிசைப்படுத்தவும்:

1.
2.
3.
4.
5.
6.
7.

12. தேவனுடைய வார்த்தையை "சரியாக பகுத்து பார்க்க" நமக்கு உதவியாக இருக்கும் நான்கு கேள்விகளை வரிசைப்படுத்தவும்.

1.
2.
3.
4.

13. வேதவாக்கியங்களை படிக்கிற பொழுது ஒரு --------------- வைத்துக்கொள்வது முக்கியமானதாக இருக்கிறது.

14. புதிய சத்தியங்களை கற்றுக் கொள்ளும் பொழுது ஒருவர் அவசியமாக செய்ய வேண்டியது என்ன?

15. "------------- அறிவீர்கள்; ---------- உங்களை ---------------" (யோவான் 8:32).


ஜெபியுங்கள்

▶▶ இம்மாதம் நடைபெறவுள்ள 21 வது வாசகர் கூட்டத்திற்காக...

▶▶ கடைசிநாட்களில் கர்த்தரை அறிகிற அறிவில் ஜனங்கள் வளர்ச்சியடைய...

▶▶ தேசத்தில் சுவிசேஷம் தடையில்லாமல் பிரசங்கிக்கப்பட...

▶▶ தமிழகத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாடு நீங்க...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய வாலிப சுவிசேஷகர்கள் தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**<u>இயேசு சொல்கிறார்:</u>**

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"

யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041



**JOIN OUR**

**WORLD EVANGELISM BIBLE SCHOOL**

**RIGHT NOW**

*Contact: 94435 58041*




வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? ஒருவேளை நீங்கள் நினிவே பட்டணத்து மக்களைப்போல வாழ்ந்துகொண்டிருப்பீர்கள் என்றால் இன்றே காலம் தாழ்த்தாது மனந்திரும்புங்கள். அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். நீங்கள் கர்த்தருடைய சத்தம் கேட்டும் மனந்திரும்பாமல் இருப்பீர்கள் என்றால் அழிவு சடுதியில் ஏற்படும். நீங்கள் உங்களுடைய ஆத்துமாக்களை இழக்க நேரிடும். ஆகையால் உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு உங்களுடைய ஆத்துமாவில் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். காலம் சமீபமாயிருக்கிறது.

இரண்டாவது, லௌகீக துக்கம். இன்றைக்கு லௌகீக துக்கம் கொள்ளுகிறவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். இந்த லௌகீக துக்கம் மரணத்தை உண்டாக்குகிறது என்று 2கொரி.7:10-ம் வசனத்தில் படிக்கிறோம். தேவனுக்கேற்ற துக்கம் இரட்சிப்பைக்கொண்டுவருகிறது என்று தியானித்தோம். ஆனால் லௌகீக துக்கமோ நம்முடைய வாழ்க்கையில் மரணத்தைக் கொண்டுவரும். ஆகையால் ஒருவரும் லௌகீக காரியங்களுக்காக துக்கங்கொள்ளாதிருங்கள். வார்த்தையில் சொல்லிவிடலாம் ஆனால் துக்கப்படாது யார்தான் இருக்கமுடியும் என்று நீங்கள் சொல்லலாம். கர்த்தர் நம்மோடு இருக்கும்போது நாம் லௌகீக துக்கம் கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஒருவேளை தேவனை ஏற்றுக்கொள்ளாத ஒருவர் ஆறுதல் அடையாமல் துக்கம் கொள்ளக்கூடும். ஆனால் கர்த்தராகிய இயேசுவையும் தேவனையும் அறிந்த ஒரு ஆத்துமா லௌகீக அதாவது உலககாரியங்களுக்காக துக்கப்படவேண்டியதில்லை. அவர்களை போஷிக்கும் கர்த்தர் அவர்களோடிருப்பார். சிலர் தங்களுடைய அருமையானவர்களை இழந்திருக்கும்போது அந்த துக்கத்திலிருந்து மீளாதிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு பவுல் சொல்லுகிறதான ஆலோசனை; "அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை" என்கிறார் (1தெச.4:13). இங்கே நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போல என்று சொல்லும் வார்த்தையைக் கவனியுங்கள். ஒரு கிறிஸ்தவனுக்கு நம்பிக்கை மிகவும் முக்கியம். இந்த நம்பிகையினாலே நாம் தேவனை ஏற்றுக்கொண்டோம். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று நம்புகிறோம். நாம் நித்தியத்திலே அவரோடு வாழுவோம் என்று நம்புகிறோம். அதைப்போல கர்த்தருக்குள் மரித்தவர்களையும் அவர் உலகத்தின் கடைசிநாளில் எழுப்புவார் என்ற நம்பிக்கையோடு இருந்து அந்த விதமான துக்கத்திலிருந்து விடுதலைபெறவேண்டும். மற்றமக்களைப்போல அதாவது நித்திரையடைந்தவர்கள் மீண்டும் எழுந்திருக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தில் இருப்பவர்களைப்போல நாமும் இருந்துவிடக்கூடாது.

இன்னும் லௌகீக துக்கம் என்று சொல்லும்போது சிலர் உடைக்காகவும், உணவுக்காகவும், இருப்பிடத்திற்காகவும் இன்னும் இதுபோன்ற அநேக காரியங்களுக்காகவும் லௌகீக துக்கம் கொள்ளுவார்கள். ஆண்டவர் இயேசு காட்டுப்புஸ்பங்களைக் கவனித்துப்பாருங்கள் என்று சொல்லி அவைகளுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்திருக்கும்போது அவைகளைப் பார்க்கிலும் தேவன் அதிகமாக நேசிக்கும் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா என்கிறார். மேலும், "அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு

உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" என்றார் (மத்.6:30-32). நம்முடைய இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருக்கு வனாந்தரத்தில் எரிச்சலை மூட்டினார்கள். அவர்களை எகிப்து தேசத்திலிருந்து அற்புதமாக வழிநடத்திக்கொண்டுவந்தார். அவர்களோ எகிப்தை திரும்பிப் பார்த்து; "ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள். அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார். அவைகள் ஜனங்களை கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்" (எண்.21:5,6). இந்த இஸ்ரவேலரைப்போல இன்றும் அநேகர் லௌகீக துக்கம் கொண்டு உலககாரியங்களையே நாடி தேவனுடைய கோபத்திற்குள்ளாக தள்ளப்படுகிறார்கள். மனிதனை உண்டாக்கின தேவன் அவனுக்குவேண்டியவைகளை கொடுக்காமல் இருப்பாரா! எவ்வளவோ காரியங்களை மனிதனுடைய வாழ்க்கையில் கர்த்தர் செய்தும், அவனுடைய என்னமெல்லாம் லௌகீகமானதாகவே இருக்கிறது. எகிப்திலிருந்து புறப்பட்ட ஆறு லட்சம்பேரில் இரண்டு பேர்மட்டுமே தேவனுடைய சித்தத்தை புரிந்தவர்களாக இருந்து வனாந்தர பயணத்தில் உறுதியுடனிருந்தார்கள். மற்றவர்கள் அதாவது லௌகீக எண்ணமுடையவர்கள் வனாந்தரத்தில் மாண்டுபோனார்கள். நீங்கள் லௌகீக காரியத்தினால் சோர்ந்துபோய் இருக்கிறீர்களா? உலகம்கொடுக்கக்கூடாத சந்தோஷத்தையும் சமாதானத்தையும் இயேசு ஒருவரே கொடுக்க வல்லவராயிருக்கிறார். அவரில் நம்பிக்கைகொள்ளுங்கள். அப்பொழுது அவரால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமுடையவரா யிருக்கிறீர்களா? அல்லது லௌகீக துக்கமுடையவராயிருக்கிறீர்களா? உங்களை சீர்தூக்கிப்பாருங்கள். தேவனுக்கேற்ற துக்கம் உங்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்பைக் கொண்டுவரும் ஆனால் லௌகீக துக்கமோ மரணத்தைக் கொண்டுவரும். எதை தேர்வு செய்யப்போகிறீர்கள்? நலமானதை தெரிந்துகொண்டு தேவனால் ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நல்லதா?**

இன்று டிவி சேனல்களில் சிரிப்பொலி என்று ஒரு சில சேனல்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அது மனிதனுக்கு சற்றுநேரத்திற்கு சந்தோஷத்தை கொடுக்கக்கூடியதைப்போல் இருக்கிறது. இந்த விதமாக சிரிப்புக்களை அநேகர் விரும்புகின்றனர். ஆனால் பரிசுத்த வேதாகமம் "நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்: முகதுக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும்"என்றும் போதிக்கிறது (பிர.7:1). ஒரு வகையில் நன்மை வருகிறது என்றால் அதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம். அதை வேண்டாம் என்று யாரும் ஒதுக்குவது இல்லை. அப்படியிருக்கும்போது; நகைப்பினாலே நமக்கு நன்மைகள் சில இருந்தாலும் நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம் என வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. அதினாலே நன்மையினால் இருதயம் சீர்ப்படும். இருதயமே எல்லாவற்றிலும் திருக்குள்ளது எனவும் வேதம்



வேண்டும். பின்பு போதனையில் ஒரு புரிந்து கொள்ளுதலை அடைவதற்காக வேத வாக்கியங்களில் முரண்பாடு கிடையாது என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். ஒரு வசனம் மற்றொரு வசனத்திற்கு முரண்பாடா தோன்றுமேயாகில், ஒன்று அல்லது இரண்டு வசனங்களை புரிந்து கொள்வதில் ஏதோ தவறு இருக்கிறது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. அவ்வசனங்கள் ஒத்துப் போகின்றவரையில் மேலும் வசனங்களை அவசியம் மீண்டும் படிக்க வேண்டியதாய் இருக்கிறது.

சில சமயங்களில் ஜனங்கள் உபதேசங்கள் அல்லது வசனப்பகுதிகளை தவறாக புரிந்துகொள்ளும் ஒரு நிலையை அடைகிறார்கள், ஏனென்றால் அவர்கள் அந்த வசனங்களை தங்களுக்கு ஒப்பிட்டுக் கொள்ளுகிறார்கள் ஆனால் மெய்யாகவே அவைகள் வேறெந்த நபர்களுக்காகவோ வேறுவிதமான சூழ்நிலைகளில் எழுதப்பட்டிருந்தன. இந்த கேள்விகள் தேவனுடைய வார்த்தையை சரியாக பகுத்து படிக்க உதவிகரமாக இருக்கும்.

- பேசியவர் யாராக இருந்தார்? அது தேவனா சாத்தானா, ஒரு மனுஷனா, ஒரு தீர்க்கதரிசியா அல்லது யார்?
- யாரிடத்தில் அவர் பேசிக் கொண்டிருந்தார். ஆதாமிடத்திலா, தானியேலிடத்திலா அல்லது ஒரு விசுவாசியினிடத்திலா அல்லது ஒரு அவிசுவாசியினிடத்திலா அல்லது பொதுவாக மனுஷ சமுதாயத்தினிடமா?
- எப்பொழுது அது பேசப்பட்டது? அது பழைய ஏற்பாட்டு காலத்தில் இருந்ததா, அல்லது புதிய ஏற்பாட்டிலா? ஒரு குறிப்பிட்ட வேதாகம காலத்தில் சகல ஜனங்களிடத்திலுமாக பேசப்பட்டதா அல்லது எல்லா மார்க்க அமைப்புகளின் காலத்திலுள்ள ஜனங்களிடத்தில் பேசப்பட்டதா?
- எந்த பிரமாணத்தின் கீழ் அவர் பேசிக் கொண்டிருந்தார்? நியாயப்பிரமாணத்தின் கீழாகவா, பிதாக்களின் கால பிரமாணத்தின் கீழாகவா, அல்லது கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழாகவா?

வேதவாக்கியங்களை படிப்பதற்கு எப்பொழுதும் திறந்த மனதுடனும் ஜாக்கிரதையுடனும் இருங்கள். கடந்த காலத்தில் பல்வேறுபட்ட பாடங்களில் நீங்கள் பொய்யான நம்பிக்கை கொண்டவர்களாக இருந்திருக்கலாம், அவைகளை குறித்து நீங்கள் புதிய சத்தியங்களைக் கற்றுக் கொள்கிறபடியினால் அவசியம் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளும் விருப்பமுடையவராக இருக்க வேண்டும். "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32).

**கேள்விகள்**

1. வேதாகமத்தில் எத்தனை பெரும் பிரிவுகள் இருக்கின்றன? அவையாவை?
2. பழைய ஏற்பாட்டில் எத்தனை புத்தகங்கள் அடங்கி இருக்கின்றன? புதிய ஏற்பாட்டில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன?
3. பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்த இரு பிரதானமான பிரமாணங்கள் யாவை?
4. அநேக ஜனங்கள் வேதாகமத்தை ---------------------------- இல்லை
5. எந்த பிரமாணத்தை கிறிஸ்துவானவர் சிலுவையின் மேல் ஆணியடித்து நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார்?
6. நியாயப்பிரமாணத்தின் கீழ் யார் தேவனுடைய ஜனங்களாயிருந்தார்கள்?
7. பிதாக்களின் காலத்தில் மனுஷனோடு தேவனுக்கு இருந்த உறவை எந்த புத்தகம் நமக்கு சொல்கிறது?
8. --------, ----------, ----------, மற்றும் --------- கிறிஸ்துவின் ஜீவியத்தை

‣ தலைப்பிற்கான வசனங்களின் முழு தொடர்ச்சியையும் கண்டுபிடிக்க உங்களுக்கு உதவியாக இருக்கும்படி ஒரு ஒத்தவாக்கிய அகராதியை உபயோகியுங்கள்.

‣ ஒவ்வொரு பத்தியையும் அதைச் சுற்றியுள்ள வசனங்களின் விளக்கத்தில் ஒவ்வொரு வசனப் பகுதியையும் ஆழ்ந்து சிந்தித்து பாருங்கள்; அப்பொழுது என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் மிகச்சரியாக உணர்ந்து கொள்வீர்கள்.

‣ வித்தியாசமான வசனப்பகுதிகள் ஒன்றுக் கொன்று ஒரு விளக்க உரையாக இருக்கக்கடவது.

‣ ஒரு குறிப்பிட்ட தலைப்புக்கான தகவல்கள் அனைத்தையும் சேகரித்து, எந்த ஒரு வசனமும் மற்ற வசனங்களுக்கு முரண்படாத வகையில் இருந்து வசனங்களை நீங்கள் புரிந்து கொண்டிருக்கிற பொழுது அந்த குறிப்பிட்ட தலைப்பில் நீங்கள் சரியான புரிந்து கொள்ளுதல் உடையவர்களாக இருக்கிறீர்கள்.

‣ பாடத்தின் பத்திகளுக்கிடையே ஒரு முரண்பாடு இருப்பதாக தோன்றினால் - அந்த வகை விஷயத்தில் நீங்கள் அவைகளை சரியாக உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறீர்கள். நீங்கள் அந்த பாடத்தை மீண்டும் மிகுந்த ஜாக்கிரதையோடும், ஒரு ஜெப சிந்தையோடும் படிக்க உங்களுடைய சத்தியத்துக்கான தேடுதலில் தேவனுடைய வழி நடத்துதலை கேட்க வேண்டியது மிக அவசியமான ஒன்றாக இருக்கிறது. பொறுமையாக இருங்கள். உங்களுடைய அறிவும், புத்தியும் வளர்வதற்கு காலம் தேவைப்படுகிறது.

‣ சத்தியத்தில் அன்பு கூராதிருக்கிறவர்களுக்கு ஏற்படும் கடுமையான பிளவுகளைக் குறித்து 2தெச.2:10-12 வசனங்களிலுள்ள எச்சரிப்பை நினைவு கூருங்கள். "... ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு..." சத்தியத்தில் நாம் அன்பு கூருகிறதும், மற்றெல்லாவற்றைப் பார்க்கிலும் அதை உணர்ந்து கொள்ள விரும்புவதும் மிக முக்கியமானதாயிருக்கிறது.

அத்தகைய ஒரு படிப்புக்கு ஒரு ஒத்தவாக்கிய அகராதியிலுள்ள பட்டியலை ஒரு உதாரணமாக எடுத்து கீழ்வரும் தலைப்பையும் வசனக் குறிப்புகளையும் என்ன போதிக்கப்பட்டிருக்கிறது என்று உணர்ந்து கொள்ளுதலுக்காக சிந்தித்து பார்ப்போம். ஒரு முழுமையான ஒத்தவாக்கிய அகராதியில் அநேகம் தலைப்புகளில் டஜன் கணக்கான அல்லது இன்னும் நூற்றுக்கணக்கான வசனக் குறிப்புகள் இருக்கும்.

கீழ்ப்படிதல்:
ஆதி.49:10
நீதி.30:17
ரோமர் 1:5
ரோமர் 5:19
ரோமர் 6:16
ரோமர் 16:19,26
2கொரி.7:15
2கொரி.9:13
2கொரி.10:5,6




தேவன் எந்த ஒரு குறிப்பிட்ட தலைப்புக்கும் சொல்வதற்காக அநேகம் காரியங்களை உடையவராக இருக்கிறார் என்பதை மாதிரியாக கொடுக்கப்பட்டுள்ள இந்த வசனங்கள் காட்டுகின்றன. இவ்விதமான சொற்றொடர்கள் வேதவசனம் முழுவதிலும் சிதறிக்கிடக்கின்றன எந்த ஒரு தலைப்புக்கும் உரிய முழுமையான காட்சியை பெறுவதற்காக எழுதப்பட்டிருக்கிற அனைத்தும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட



போதிக்கிறது. இந்த இருதயம் சீர்ப்படுமானால் எத்தனை ஆசீர்வாதங்கள் நம்மைத்தேடி வரும். ஆகையால் கர்த்தர் இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்றார். இந்த இருதயம் சீர்ப்பட, மற்றும் சுத்தப்பட நகைப்பைப் பார்க்கிலும் துக்கத்திற்கு திரும்புங்கள். அதுவும் தேவனுக்கேற்ற துக்கத்திற்கு திரும்புங்கள் அது உங்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்பைக் கொண்டுவரும். உங்களுடைய வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாற இவ்வசனங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுக்கும்படியாக கேட்கிறோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

### வேதஅறிவுப்போட்டி எண் 200-ல் வெற்றிபெற்றவர்களின் தொடர்ச்சி

-15-ம் பக்கத் தொடர்ச்சி

38.J.ரேச்சல் தமிழரசி - பசுமலை
39.Mrs.அன்னம்மாள் - தூத்துக்குடி
40.Mrs.தேவபுஸ்பம் - நாசரேத்
41.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
42.Mrs.தேவிராஜசிங் - திருப்பூர்
43.S.ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
44.Mrs.மேரிநிர்மலா - மதுரை
45.P.சுந்தரராஜன் - கோவை
46.S.A.சாமுவேல் - பரமத்தி
47.S.R.பெரியசாமி - சேலூர்
48.Mrs.சாந்தாபழநி - தருமபுரி
49.Mrs.கிரேஸ் சங்கீதா - தூத்துக்குடி
50.Mrs.சொர்ணமணிதாமஸ் - தூத்துக்குடி
51.P.A.ஜெபாஸ்டின் - சென்னை
52.Mrs.பிரமிளாரேவதி - கோவை
53.Mrs.பொன்னிவிக்டர் - திருப்பூர்
54.S.K.அன்பழகன் - கன்னியாகுமரி
55.P.மார்த்தாள் - நாமக்கல்
56.Mrs.அல்லிராணிகாட்வின் - சென்னை
57.S.P.ராஜாத்தி - பாண்டமங்கலம்
58.S.கலைச்செல்வி - பாண்டமங்கலம்
59.S.ஷீபாவர்ஷினி - பாண்டமங்கலம்
60.L.மிஸ்மா - பாண்டமங்கலம்
61.S.சூரியபிரகாஸ் - பாண்டமங்கலம்
62.K.ஜீவாமிர்தம் - பாண்டமங்கலம்
63.G.நிர்மலாவின்சென்ட் - திருப்பூர்
64.S.லதாசூரியமூர்த்தி - தேனி
65.J.செல்வராஜ் - புதியம்புத்தூர்
66.Mrs.சுசிலாராஜசிங்- திருநெல்வேலி
67.B.ஸ்டெல்லாமா - கூத்தூர்
68.M.இந்திராஜெபக்கனி - நாசரேத்
69.Mrs.ஜெபாமோசஸ் - தூத்துக்குடி
70.Mrs.பிராங்ளினா ஜான் - ஊட்டி
71.Mrs.புளோராசுந்தர் - மதுரை

### வேதஅறிவுப்போட்டி எண் 201-ல் வெற்றிபெற்றவர்களின் தொடர்ச்சி

38.Mrs.சொர்ணமணிதாமஸ் - தூத்துக்குடி
39.J.ரேச்சல் தமிழரசி - பசுமலை
40.P.சந்திராடேனியல்- திருநெல்வேலி
41.Mrs.அல்லிராணிகாட்வின் - சென்னை
42.Mrs.ஜாய்ஸ்ஹலன்புனிதா - சென்னை
43.R.அந்தோனியம்மாள் - தூத்துக்குடி
44.Mrs.அன்புக்கமலம் - காரைக்குடி
45.S.ஜாய்சந்திரகாந்தா - நெல்லூர்
46.B.ஞானதீபம்ஜெபராஜ்- திருநெல்வேலி
47.S.சாந்தகுமாரி - நாசரேத்
48.Mrs.ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
49.Mrs.ஜோதிமணி - ஸ்ரீவில்லிபுத்தூர்
50.J.ஜான்ஸி - ஆனைமலை
51.G.நிர்மலாவின்சென்ட் - திருப்பூர்
52.Mrs.இந்திராஜெபக்கனி - தூத்துக்குடி
53.Mrs.ஜெனிதர்மராஜ் - தோட்டக்குடி
54.Mrs.தேவிராஜசிங் - திருப்பூர்
55.Mrs.கிரேஸ் சங்கீதா - தூத்துக்குடி
56.G.பூங்கோதை - தூத்துக்குடி
57.N.ஜெபத்தாய் - நாசரேத்
58.Mrs.ஜெபாநியூட்டன்- திருநெல்வேலி

**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

நடப்புச் செய்திகள்

‣ **புதுகையில் புதிய மருத்துவக் கல்லூரியை முதல்வர் பழனிசாமி திறந்து வைத்தார்.**

‣ **தமிழக அரசுடன் இணைந்து சென்னை - குமரி - திருவனந்தபுரம் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை துவக்க, மத்திய அரசு தயாராக உள்ளது.**

# நாம் ஏன் வாரத்தில் முதல் நாளிலே கூடுகிறோம்

## Why We Meet On The First Day Of The Week

*J.C.Choate*



கர்த்தருடைய சபை அங்கத்தினர்களும், கிறிஸ்தவர்களுமாகிய நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என வேதாகமம் போதிக்கிறது (யோவா.4:24). நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை புரிந்து கொண்டு உண்மையோடு ஆராதிக்க வேண்டுமென்பது இதன் பொருள். மேலும் நாம் இதை கர்த்தருடைய வார்த்தையின்படி செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் வினாவானது: நாம் அதை எப்பொழுது செய்ய வேண்டும்? மேலும் எப்படிச் செய்ய வேண்டும்? வெள்ளி, சனி, ஞாயிறு அல்லது வாரத்தின் வேறு நாட்களில் அதைச்செய்ய வேண்டுமா? ஆராதிக்கும்படி நாம் கூடிவருவது உண்மையாகவே முக்கியமான காரியமா?

பழைய ஏற்பாடு முழுமையும் நாம் வாசிக்கையில் தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் ஓய்வு நாளை நினைவுகூரவும் அதைப் பரிசுத்தமாய் ஆசாரிக்கவும் வேண்டுமென கேட்டுக்கொண்டாரென நாம் பார்க்கிறோம். இது பத்துக்கட்டளைகளில் ஒன்று (யாத்.20:8-11). ஆனால் நாம் கிறிஸ்துவின் நாட்களுக்கு வரும் போது, கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அவர் பழைய கட்டளையை அல்லது தேவனுடைய ஜனங்கள் ஓய்வு நாளை அநுசரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட கட்டளையை எடுத்துப்போட்டார் என நாம் கற்றுக்கொள்கிறோம் (யோவா.1:17, கொலோ.2:14; எபி.9:15-17). ஆனபடியால், பழைய கட்டளை நீக்கப்பட்டபோது, அது புதிய கட்டளையால் அப்புறப்படுத்தப்பட்டது. அந்த நிகழ்வு உண்மையானது. ஓய்வு நாள் கட்டுப்படுத்தப்படும்படிக்கு ஒழிந்தது, அந்த சமயத்தில் தானே, கர்த்தர் தம்முடைய ஜனங்கள் ஆராதனை செய்யும் நோக்கத்தில் கூடி வரும்படி ஒரு புதிய நாளை அறிமுகப்படுத்தினார். அந்த நாள் வாரத்தின் முதல் நாளாகும். அதன் படியே ஓய்வு நாள் சனிக்கிழமையில் வந்தது அல்லது வாரத்தின் ஏழாம் நாளில் வந்தது ஆனால் இப்பொழுது அவர் ஆராதனையில் கிறிஸ்துவை முதன்மையாகவும் மற்ற எல்லாவற்றிலும் மேலானதாகவும் வைக்கும்படி நம்மை எதிர்பார்க்கிறார்.

வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டு பகுதி வாரத்தின் முதல் நாளைப்பற்றிச் சொல்லுவதற்கு அதிகமான ஆதாரங்களைக் கொண்டிருக்கிறது நாம் இப்பொழுது இந்த நாள் ஏன் மிக முக்கியமானது, மேலும் நாம் ஆராதிக்கும்படிக்கு ஏன் வாரத்தின் முதல் நாளில் கூடிவரவேண்டும் என்பதற்கு பல காரணங்களைக் குறிப்பிடுவதற்கு நேரம் எடுத்துக்கொள்வோம்.

**முதலாவது,** கிறிஸ்து வாரத்தின் முதல்நாளில் உயிரோடெழுப்பப்பட்டார், ஓய்வுநாள் வாரத்தின் பரிசுத்த நாளாக இன்னுமிருந்தால் அல்லது தேவனுடைய ஜனங்கள் ஆராதிக்கும்படி இன்னும் கூடிவரவேண்டுமென்று இருந்தால், பின் ஏன் கிறிஸ்து வாரத்தின் முதல் நாள் அல்லது ஞாயிற்றுக் கிழமையில் எழுப்பப்பட்டார்? ஓய்வுநாள் ஒரு பரிசுத்தமான நாளாய் இருந்தபடியினால் அந்த நாளில் அவர்



"இவ்விதமாக நாம் விசுவாசித்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்கு கீழானவர்களல்லவே. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் கடைசி காலமாகிய "கிறிஸ்துவின் காலம் என்று அழைக்கப்படும் கால கட்டத்தில் கிறிஸ்தவர்கள் வசிக்கிறார்கள். இந்த காலம் வேதாகமத்தின் இரண்டாவது பெரும்பிரிவாகிய புதிய ஏற்பாட்டில் இருக்கிறது.

**புதிய ஏற்றாபடு:** 27 புஸ்தகங்களை கொண்டதாக இருக்கிறது, இதன் பெயரே குறிப்பாக உணர்த்துகிறது: தேவன் தம்முடைய ஜனங்களோடே கூட செய்த புதிய ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை, முழு உலகத்திலும் உள்ள சகல கீழ்ப்படிந்த ஜனங்கள், புதிய ஏற்றாட்டின் கீழ் இருக்கிற ஒரே ஆவிக்குரிய இராஜ்யமாகிய தேவனுடைய விசேஷமான தேசம், இது தேவனுடைய குடும்பத்துக்குள்ளாக பிறந்த சகல ஜனங்களினால் உருவாக்கப்பட்டிருக்கிறது, அவர்களே இவ்விதமாக கிறிஸ்தவர்களாகிறார்கள். வேதாகமத்தின் பகுதியாக புதிய ஏற்பாடு என்றும் இருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் இன்றைக்கு இதன்படி ஜீவிக்க வேண்டும். ஏனென்றால் அந்த ஏற்பாடு அல்லது பிரமாணத்தினாலே நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். (யோவான் 12:49).

■ புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் என்பதாகும். இவைகள் இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தை குறித்த நான்கு விவரங்களை அளிக்கின்றன இவைகள் பொதுவாக "நான்கு சுவிசேஷங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. இது ஒரு தவறான குறியீட்டு சொல்லாக இருக்கிறது. கிறிஸ்துவின் ஜீவியத்தை பற்றிய ஒரே ஒரு சுவிசேஷம் - நற்செய்தி - கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் கிறிஸ்துவினுடைய நான்கு சீஷர்களினால் அளிக்கப்பட்டிருக்கிறது அவைகளை படித்து கிறிஸ்துவினிடத்தில் உள்ள விசுவாசத்தை விருத்தி செய்து கொள்ளுங்கள்.

■ அடுத்த புஸ்தகம் கிறிஸ்துவின் சரீரமாகிய அவருடைய சபை - பூமியிலே ஆவிக்குரிய தேவனுடைய குடும்பம் - மற்றும் நாம் எவ்வாறு அதின் ஒரு அங்கம் ஆகலாம் இவற்றை குறித்த பல சத்தியங்களை கொண்டதாக இருக்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் எனும் இந்த புஸ்தகம், யார் கிறிஸ்தவர்களாக மாறுகிறார்களோ அவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

■ அதனை தொடர்ந்து வரும் இருபத்தொன்று புஸ்தகங்கள் ஏற்கெனவே கிறிஸ்தவர்களாய் இருந்தவர்களுக்கு தேவனுக்கான அர்ப்பணிப்பிலே அவர்கள் எவ்வாறு ஜீவிக்க வேண்டும் வளரவேண்டும் என்பதற்காக எழுதப்பட்டன.

■ கடைசி புஸ்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம், தீமைக்கு மேலாக நன்மையின் இறுதியான ஜெயம், சாத்தான் மற்றும் அவனுடைய சகல ஊழியக்காரர் மேலும் கிறிஸ்துவும், கிறிஸ்தவர்களும் அடையும் ஜெயம் இவற்றை வெளிப்படுத்துகிறது. உபத்திரவத்தின் மத்தியிலும் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களுக்கு இது நம்பிக்கையை அளிக்கிறது.

வேதாகமத்தை படிப்பதில் நீங்கள் சில விஷயங்களில் முன்பே கொண்டிருந்த நம்பிக்கையைப் பற்றிக்கொண்டிருக்கும் முயற்சிக்கு எதிராக உங்களை காத்துக்கொள்ளும். நீங்கள் எதை பார்க்க விரும்புகிறீர்களோ அதை மாத்திரம் பார்ப்பீர்களேயாகில், அதே தலைப்புக்கான மற்ற போதனைகளுக்கு நீங்கள் உங்களை குருடராக்கி கொள்ளுகிறீர்கள், தவறான முடிவுகளை எட்டும் பெரிய அபாயத்தில் நீங்கள் இருப்பீர்கள். தேவனுடைய வார்த்தையை படிப்பதில் இந்த விதமாக முன்னேறி செல்லுங்கள்:

- ஒரு குறிப்பிட்ட தலைப்பில் சொல்லப்படிருக்கிற அனைத்தையும் தேடுங்கள்.

வேதாகமத்தை சரியாக பகுத்து படிக்க ஒரு வழிகாட்டி

## Guide for Rightly Dividing the Bible

*-Betty*

பெண்கள் பகுதி




**பாடம் - 8**

வேதாகமம் இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது: பழைய , புதிய ஏற்பாடுகள்.

பழைய ஏற்பாட்டில் மொத்தம் 39 தனித்தனி புஸ்தகங்கள் அடங்கியிருக்கின்றன தேவனுடைய பிரமாணத்தையும், பின்னர் இஸ்ரவேல் ஜனங்களுக்காக அவர்களை ஒரு தேசமாக பாதுகாத்து வைத்திருந்ததையும், அதன் மூலமாக அவருடைய குமாரன் பிறக்கும்படியாக இருந் ததையும் சொல்கிறது. சத்தியத்தின் ஐசுவரியங்கள் இதில் அடங்கியிருக்கிறபடியால், வரலாற்றுக்காக அதை அளிக்கிறபடியால், இயேசுவை குறித்த தீர்க்கதரிசனங்களுக்காகவும், கீழ்ப்படிதலுக்கான பலன்களின் உதாரணங்களுக்காகவும், கீழ்ப்படியாமைக்கான தண்டனைக்காகவும் இந்த வேதவசன பகுதியை நாம் அறிந்து கொள்வது நன்மையானதாக இருக்கிறது.

**பழைய ஏற்பாடு:** இரண்டு நீண்ட கால கட்டங்களை குறித்து சொல்கிறது,அந்த நேரத்தில் தேவன் மனுஷரோடு இரண்டு அடுத்தடுத்த பிரமாணங்களின் கீழ் ஈடுபாடு உடையவராக இருந்தார். தேவன் தனிப்பட்ட விதமாக பிதாக்களுடனே, குடும்பத் தலைவர்களுடனே செயல்படுகிறவராக இருந்தார். இது "பிதாக்களின் காலம்" என்று அழைக்கப்படுகிறது. கர்த்தர் தமக்கு கீழ்ப்படிதலாயிருந்தவர்களுடனே நேரடியாக பேசினார். அவர்களுக்கு வழிநடத்துதல்களையும், கற்பனைகளையும் வழங்கினார். அக்காலத்தில் வாழ்ந்தவர்களில் ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோர் முக்கியமான முற்பிதாக்களுக்கான உதாரணங்களாயிருக்கிறார்கள். இந்த கால கட்டம் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு வருஷங்களுக்கு தொடர்ந்தது.

யாத்திராகமம் புஸ்தகத்தில் நாம் கால கட்டத்தின் இரண்டாவது பிரதானமாக பிரிவின் தொடக்கத்தைப் பார்க்கிறோம்: தேவன் ஆபிரகாமுக்கு பண்ணிய வாக்குத்தத்தங்கள் இஸ்ரவேல் தேசம் உருவாகி மோசேயின் மூலமாக இஸ்ரவேலருக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட பொழுது நிறைவேறின ஆயிரத்து ஐநூறு வருஷங்களுக்கு இப் பிரமாணமானது நடைமுறையில் இருந்தது. கிறிஸ்துவின் வருகைக்காக உலகத்தை ஆயத்தப்படுத்த தேவனானவர் இஸ்ரவேல் ஜனங்கள் மூலமாக கிரியை செய்து கொண்டிருந்தார். இது "மோசேயின் காலம்" என்று அழைக்கப்பட்டது.

அநேகம் ஜனங்கள் வேதாகமத்தை சரியாக பகுத்து பார்க்கிறதில்லை. அவர்கள் "பத்து கட்டளைகளையும்" மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தையும் வாசிக்கிறார்கள் மேலும் அந்த ஜனங்கள் எல்லாரும் இன்றைக்கும் நாம் அந்த பிரமாணத்தின்படி ஜீவிக்க வேண்டியதாய் இருக்கிறது என்று எண்ணுகிறார்கள். ஆனால் அந்த கற்பனைகள் அந்த காலத்திலேயே வாழ்ந்த சகல ஜனங்களுக்குமாக கொடுக்கப்படவில்லை! அவைகள் குறிப்பாக தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரவேலருக்காக கொடுக்கப்பட்டதேயொழிய அவைகள் ஒருபோதும் முழு உலகத்தையும் கட்டுப்படுத்துகிறதாக இருக்கவில்லை.

நியாயப்பிரமாணத்தினாலே கிறிஸ்தவர்கள் நியாயந்தீர்க்கப்படமாட்டார்கள் கொலோ.2:14 கிறிஸ்து "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக்குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின்மேல் ஆணியடித்து வெற்றி சிறந்தார்" (கொலோ.2:14).

**கலாத்.3:24,25 விளக்குகிறது:**



உயிரோடெழுப்பப்படாததற்குக் காரணமென்ன என நிச்சயமாக விவாதிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் ஓய்வு நாள் இன்னும் கட்டுப்படுத்திக் கொண்டிருக்குமானால், கல்லறையிலிருந்து கிறிஸ்து எழுந்த அந்தநாள் எவ்வளவு அதிகப்பரிசுத்தமாயிருந்திருக்கும்? உண்மையாகவே, அந்த நாள் ஆராதனைக்குரிய புதிய நாளாக இருக்கும்படிக்கே அந்த நாளை முக்கியப்படுத்தும்படிக்கு கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் எழுந்தார். நாம் மத்.28:1 க்கு திரும்புகையில், நாம் வாசிக்கலாம், "ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்". தொடர்ந்து வாசிக்கையில், அந்த நாளில் கர்த்தர் உயிரோடெழுப்பப்பட்டிருந்ததைப் பற்றி அறிவுறுத்தப்படுகிறோம். நாம் இதே காரியத்தை மாற்கு 16:1,2 லும் அதைப்போல லூக்.24:1,2 மற்றும் கடைசியாக யோவா.20:1-லும் வாசிக்கிறோம்.

**இரண்டாவது,** வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து கிறிஸ்து உயிரோடெழுப்பப்பட்ட பின்பு அவர் தம்முடைய சீஷர்களைச் சந்திக்க இரு வேறு சூழ் நிலைகளைப் பொருத்தமானதாகக் கண்டார். இரு நிகழ்வுகளுமே வாரத்தின் முதல் நாளிலே நடைபெற்றாகச் சொல்லப்படுகிறது........நாம் வாசிக்கிறோம், "வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார் அவர் இப்படிச்சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்" (யோவா.20:19,20). மீண்டும் வாசிக்கிறோம், "மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது, அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" (யோவா.20:26-29). இப்பொழுது இயேசு வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து வெளியே வந்து, அந்த நாள் சாயங்காலத்தில் சீஷர்களுக்குத் தரிசனமாகி, எட்டுநாட்களுக்குப் பிறகு மீண்டும் சீஷர்களுக்குத் தரிசனமாகி இருந்தாரென்றால், அவர் மீண்டும் அவர்களை வாரத்தின் முதல் நாளிலே சந்தித்தார் என அர்த்தமாகாதா? வாரத்தின் முதல் நாளின் சிறப்பம்சத்தை பெற்றிருக்கவில்லையென்றால் இந்த அனைத்து சம்பவங்களும் வாரத்தின் முதல் நாளிலே நடந்தேறியதென வேதவாக்கியங்கள் அறிவுறுத்துகின்றன என்று இது புதியதாகத் தோன்றவில்லையா? எப்படியாகிலும் இயேசு வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து வெளியே வந்து இருவேறு சூழ்நிலைகளிலும் வாரத்தின் முதல் நாளிலே அவர் சீஷர்களை சந்தித்தார் என இந்த நிகழ்ச்சிக்கு ஒரு பெரிய சிறப்பம்சம் இணைந்ததென்று நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன்.

**மூன்றாவது,** பெந்தெகொஸ்தே நாள் வாரத்தின் முதல் நாளில் வந்தது, பஸ்காவிற்குப் பின் ஐம்பதாவது நாள் அது. அப்போஸ்தலர் 2-ன்படி அப்போஸ்தலர் மேல் பரிசுத்த ஆவியை அனுப்பும்படிக்கும், முதன்முறையாக சுவிசேஷம் அந்த நேரத்தில் பிரசங்கிக்கப்படும்படிக்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இரட்சிக்கப்படும்படிக்கு என்னசெய்யவேண்டுமென சொல்லும்படிக்கும், அந்தநாளில் சபை ஸ்தாபிக்கப்படும்படிக்கும் கர்த்தர் இந்த நாளைத் தெரிந்துகொண்டாரென அர்த்தமாகிறது. இப்பொழுது வாரத்தின் முதல் நாளில் ஒரு சிறப்பு முக்கியத்துவம் இடம்பெறவில்லையென்றால், என்ன நடந்திருக்கும்? வாரத்தின் மற்ற நாட்களுக்கும் மேலான நாளாக இந்த நாள் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு ஏதோ, சிறப்பான காரணம் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டுமென்பது மிக உண்மை. உதாரணமாக, ஓய்வு நாள் இன்னும் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தால், பின் ஏன் கர்த்தர் பின்வரக்கூடிய நாளுக்குப் பதிலாக அந்த நாளை அனுசரிக்கும்படி தெரிந்து கொள்ளவில்லை? ஆராதிக்கும்படியான நாளான வாரத்தின் முதல் நாளினால் அந்த ஓய்வு நாள் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் கிறிஸ்தவர்களின் காலத்தில் பழையநிலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

**நான்காவது,** தேவனை ஆராதிக்கும்படி ஆதி கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடிவந்ததற்கு நாம் ஓர் உதாரணத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் வாசிக்கிறோம், "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7) என வாசிக்கிறோம். நாம் இந்தக் குறிப்பை கவனிக்கையில் பவுலும் மற்றவர்களும் வாரத்தின் முதல் நாளிலே சபையோடுகூட கூடிவரும்படிக்கு கப்பல் ஏறி பிலிப்பு பட்டணத்தை விட்டு துரோவாபட்டணத்துக்கு வந்து, அங்கே ஏழு நாட்கள் தங்கியிருந்தார்கள் என அறிவுறுத்தப்படுகிறோம். இதன் மூலம் நாம் திட்டமாக காணமுடியும் அதாவது ஏழாம் நாள் அல்லது மற்ற நாள் ஆராதனை நாளாயிருந்திருக்குமானால், அவர்கள் தங்கள் கூட்டத்தோடுகூட அங்கிருந்த கிறிஸ்தவர்களுடன் ஆராதனையை நடத்தியிருந்திருக்கலாம் அதன்பின் தங்களுடைய பிரயாணத்தைத் தொடர்ந்திருந்திருக்கலாம். மாறாக, கர்த்தர் தம்முடைய ஜனங்கள் கூடி ஆராதிக்கும்படி நியமித்திருந்த அந்த நாளில் ஆராதிக்க வேண்டுமென வாரத்தின் முதல் நாள் வரும்வரைக்கும் அவர்கள் காத்திருந்தார்கள். அதன் பின் எந்த நாளில் என்ன நடந்தது? அந்த காரியத்திற்காக சீஷர்கள் அந்த நாளில் கூடி வந்தார்கள். ஏன் அவர்கள் கூடிவந்தார்கள்? அவர்கள் அப்பம் பிட்கும்படி கூடி வந்தார்கள் என வேதம் கூறுகிறது. மேலும் அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவுகூரும்படிக்கு கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி கூடி வந்தார்களென இந்நிகழ்ச்சிக்கு ஆதாரத்தைக் கொண்டிருக்கிறது (1கொரி.11:23-29). அதன் பொருள், வேதாகம உதாரணத்தின் மூலம், கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்கும்படி கூடிவந்த நாள் வாரத்தின் எந்த முதல் நாள்? நிச்சயமாக வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளே. ஏழாம் நாள் ஆராதனைக்குரிய நாளாக இருந்த பழைய ஏற்பாட்டுக் காலத்திற்குத் திரும்புங்கள், தேவன் ஒவ்வொரு ஓய்வுநாளையும் அவர்கள் நினைவுகூரும்படி சொல்லவில்லை,



## வேதஅறிவுப்போட்டி
## எண் 200-ன் விடைகள்

1. எரேமியா- எரேமியாவின் புலம்பல் 3:1
2. அதிகாரமுடையவராய் - மத்.7:28
3. பிழைப்பதில்லை - எசே.18:13
4. சீமோன் - மாற்.15:21
5. நேபுகாத்நேச்சார் - தானி.3:28
6. கிரேக்கு லத்தீன் எபிரெயு - லூக்.23:38
7. விபசாரக்கள்ளர் - ஓசி.7:4
8. ஓய்வுநாள் - யோவா.9:14
9. இஸ்ரவேல் வம்சத்தாருக்கு - ஆமோஸ் 5:5
10. சிறைச்சாலைக்காரன் - அப்.16:34

## வேதஅறிவுப்போட்டி
## எண் 201-ன் விடைகள்

1. தர்ஷீசுக்கு - யோனா 1:3
2. செத்ததாயிருக்கும் - ரோம.7:8
3. கூலிக்கு, பணத்துக்கு - மீகா3:11
4. ஆவியானவர் - 1கொ.2:10
5. நீதியைச் - நாகூம் 1:2
6. கிறிஸ்துவினாலே - 2கொ.3:14
7. தன்னுடையதல்லாததைத்... - ஆபகூ.2:6
8. கலாத்தியர்களுக்கு - கலா.1:6
9. சிறுமைப்பட்டார்கள் - சகரி.10:2
10. அந்நியராயிருக்கிறார்கள் - எபே.4:18

## வேதஅறிவுப்போட்டி
## எண் 200-ல் வெற்றிபெற்றவர்கள்

1.R.அந்தோனியம்மாள் - தூத்துக்குடி
2.J.ஆலிவ் - கோவை
3.Tmt.மரகதம்திரவியம் - கோம்பை
4.A.டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
5.Mrs.பவுல்மாட்டின் - சிவகங்கை
6.Mrs.அன்புக்கமலம் - காரைக்குடி
7.E.அதிசயம் - பனைகுடி
8.Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
9.A.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
10.Mrs.கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
11.Mrs.ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
12.J.S.ஜெயாமேரிதாய் - திண்டுக்கல்
13.S.பிரான்சிஸ் ஸ்டெல்லா - வள்ளியூர்
14.T.ராஜாத்தி - கோம்பை
15.S.சாந்தகுமாரி - நாசரேத்
16.S.ஜாய்சந்திரகாந்தா - நெல்லூர்
17.Mrs.ராஜம்மாள் - திருப்பூர்
18.Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
19.B.ஞானதீபம்ஜெபராஜ் - திருநெல்வேலி
20.Mrs.கெத்சிசெல்வின் - சென்னை
21.K.ரத்னாபாய்பிரசாத் - மதுரை
22.S.தங்கம் - கன்னியாகுமரி
23.Miss.சாந்தாதேவி - தேனி
24.Mrs.ஜோதிமணி - ஸ்ரீவில்லிபுத்தூர்
25.J.ஜான்ஸி - கோவை
26.K.ராணி - தூத்துக்குடி
27.A.ஜெபக்கனி - சங்கரன்கோவில்
28.Mrs.ஜாய்மேத்யூ - விக்கிரமசிங்கபுரம்
29.T.ஏஞ்சலின்நேசமலர்- கன்னியாகுமரி
30.Mrs.ரூபவல்யா - தூத்துக்குடி
31.Mrs.வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
32.P.சந்திராடேனியல் - திருநெல்வேலி
33.Mrs.நவரத்தினஞானராஜ் - நாசரேத்
34.R.ஞானசிரோன்மணி - மதுரை
35.Mrs.தேவதாதேவப்பிரியம் - சென்னை
36.Mrs.கிரேஸ்டெல்லா பக்தன் - சென்னை
37.Mrs.எபநேசர் எட்வேர்ட் - கடலூர்

## வேதஅறிவுப்போட்டி
## எண் 201-ல் வெற்றிபெற்றவர்கள்

1.T.ராஜாத்தி - கோம்பை
2.R.ஜெபக்கனி - கூமாபட்டி
3.Mrs.கெத்சிசெல்வின் - சென்னை
4.Mrs.ரூபவல்யா - தூத்துக்குடி
5.Mrs.நவரத்தினஞானராஜ் - நாசரேத்
6.Mrs.புளோராசுந்தர்- மதுரை
7.Tmt.மரகதம்திரவியம் - கோம்பை
8.Mrs.நெல்சிபால்ராஜ்- திருநெல்வேலி
9.Mrs.பிராங்லினாஜான் - ஊட்டி
10.Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி
11.B.ஸ்டெல்லாமா - கூத்தூர்
12.E.அதிசயம் - பனைகுடி
13.Miss.சாந்தாதேவி - தேனி
14.T.ஏஞ்சலின்நேசமலர்- கன்னியாகுமரி
15.S.தங்கம் - கன்னியாகுமரி
16.S.லதாசூரியமூர்த்தி - தேனி
17.J.ஆலிவ் - கோவை
18.Mrs.பவுல்மாட்டின் - சிவகங்கை
19.Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
20.Mrs.ஜாய்மேத்யூ - விக்கிரமசிங்கபுரம்
21.K.ரத்னாபாய்பிரசாத் - மதுரை
22.A.டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
23.Mrs.வசந்தா ரபீந்திரன் - தூத்துக்குடி
24.R.சாமுவேல் - ஊதியூர்
25.Mrs.கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
26.Mrs.சாந்தாபழநி - தருமபுரி
27.Mrs.மேரிநிர்மலா - மதுரை
28.J.செல்வராஜ் - தூத்துக்குடி
29.Mrs.தேவதாதேவப்பிரியம் - சென்னை
30.Mrs.அன்னம்மாள் - தூத்துக்குடி
31.Mrs.ஞானம்பிலிப்பு - கோவை
32.A.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
33.Mrs.எபநேசர் எட்வேர்ட் - கடலூர்
34.K.ராணி - தூத்துக்குடி
35.Mrs.பிரமிளாரேவதி - கோவை
36.Mrs.தேவபுஸ்பம் - நாசரேத்
37.R.ஞானசிரோன்மணி - மதுரை

-தொடர்ச்சி 7-ம் பக்கம்

செய்கிறது. மேலும் இப்படி விலகும்போது நாம் தேவனுடைய கற்பனைக்கு விலகிச் செல்கிறோம், தேவனை வேதனைப்படுத்துகிறோம், நம் நண்பனையும் வேதனைப்படுத்துகிறோம், மேலும் நமக்கும் தேவனுக்கு இடையேயும், நமக்கும் நம்முடைய நண்பனுக்கு இடையேயும் பிரிவினையை உருவாக்குகிறோம். பாவம் உறவுகளை அழிக்கிறது மேலும் வருங்கால உறவுகளுக்கும் தடை செய்யும்படி இடையூறு உண்டாக்குகிறது.

பாவம் தேவனிடமிருந்து மனிதனை ஏன் பிரிக்கிறது? ஏனென்றால் தேவன் ஒரு பரிசுத்தமான தேவன் (லேவி.11:45, 1பேது.1:16) பரிசுத்தம் என்ற வார்த்தையின் பொருள் ஏதோ ஒன்றிலிருந்து ஒதுக்கி வைத்தல் அல்லது 'பிரிவினை ஏற்படுதல்' என்று பொருள். தேவன் பரிசுத்தர் எனவே அவன் பாவத்திலிருந்தும் பாவிகளிடமிருந்து விலக்கப்பட்டவராயிருக்கிறார் (எபி.7:26). இதுவும் அவர் சுத்தமுள்ளவராகவும் மாசற்றவராகவும் இருக்கிறார் என பொருள்படுகிறது. அவர் முற்றிலும் நல்லவராகவும் எப்போதும் நீதி எதுவோ அதைச் செய்கிறவராயிருக்கிறார் (லூக்.18:19, ஆதி.18:25). இது **தேவன் குற்றம் செய்யும் சந்ததியையோ, பாவக் குற்றங்களையோ சகித்துக் கொள்ளமாட்டார் என்று பொருள்படுகிறது** அப்போஸ்தலனாகிய பவுல், **"... ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது..." (ரோம.5:18)** என்றெழுதினார். நாம் பாவஞ்செய்கிறபோது, தேவன் பரிசுத்தராயிருக்கிறது போல நாம் பரிசுத்தமாயிருக்கவேண்டியதைத் தெரிந்து கொள்வதில்லை, அப்படிச் செய்வதனால், நாம் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறோம். தாவீது பத்சேபாளோடு விபசாரஞ்செய்த பின் ஏத்தியனாகிய உரியாவை கொன்று போட்டான் (2சாமு.11-12). அதன் பின்பு, "தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்" (சங்.51:4). என்று எழுதினான். பாவம் ஒரு உண்மையான பிரச்சனை மேலும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏதோ சில கண்டிப்பாக நடைபெறும்! அதிர்ஷ்டவசமாக பாவத்திற்கு ஒரே பலியாக தேவன் தமது குமாரனாகிய இயேசுவை நமக்காகக் கொடுத்திருக்கிறார் அடுத்த பாடத்தில் இது குறித்து இன்னுமதிகமாகக் கற்றுக்கொள்வோம்.

## பொது அறிவுச் சோதனை

1. ஆபிரகாம் லிங்கன் செய்த சீர்திருத்தம் எது?

அ) நிலசீர்திருத்தம் ஆ) நிறவெறி ஒழிப்பு இ) அடிமைத்தன ஒழிப்பு

2. மின்சார சக்தியை சேமிக்கப் பயன்படுவது எது?

அ)எலக்ட்ரோ மீட்டர் ஆ) அக்யூமுலேட்டர் இ) அம்மீட்டர்

3. இரும்புச் சத்து குறைவால் வரும் நோய் எது?

அ) அனிமியா ஆ) காய்ட்டர் இ) ஸ்கர்வி

4. சில பிராணிகள் செயலற்றிருத்தல் எந்த காலத்தில் நடைபெறும்?

அ) கேடைகாலம் ஆ) வேனிற்காலம் இ) குளிர்காலம்

5. விமான நிலையத்திற்கு அருகில் வசிப்பவர்களுக்கு எந்த வகையான சுகாதார கேடு விளைகிறது?

அ) கதிரியக்கம் ஆ) சப்தம் இ) காற்று

**விடைகள்:**
1. அடிமைத்தன ஒழிப்பு
2. அக்யூமுலேட்டர்
3. அனிமியா
4. குளிர்காலம்
5. சப்தம்



ஆனால் ஓய்வு நாளை நினைவுகூரும்படி மாத்திரம் சொன்னார். அவர்களுக்கு அந்த நாளை நினைவுகூரவேண்டுமென்பது அவர்கள் எல்லாவற்றையும் அல்லது ஒவ்வொரு ஓய்வுநாளையும் நினைவுகூரவேண்டுமென்பதாகும்.

வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்வது பற்றிய விஷயத்தில் இதே காரியம் உண்மையே. அந்த கூட்டத்தில் அவர்கள் சில போதனைகளைப் பெற்றிருந்தார்கள். வேதவாக்கியம் பவுல் போதித்தார் எனவும் தன்னுடைய போதனையை நடுராத்திரிவரை தொடர்ந்தார் எனவும் கூறுகிறது. இருந்தபோதிலும் அவர்கள் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள் அல்லது பாடல் பாடுவதில் ஈடுபட்டிருந்தார்கள் என்றோ மேலும் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்றோ இது சொல்ல வில்லை. ஆனால் பவுலும் மற்ற கிறிஸ்தவர்களும் அந்த நாளில் கூடி வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்டு தேவனை ஆராதித்தார்கள். அப்படியென்றால் நாம் கிறிஸ்தவர்களாயிருந்தால், நாமும் அதே காரியத்தைச் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம் என்றே பொருள்படுகிறது.

**ஐந்தாவதாக,** பவுல் தன்னுடைய நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே ஏதாகிலும் சேர்த்துவைக்க வேண்டும் அல்லது தங்களுடைய வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டுமென அங்கே கட்டளையிட்டார் என வாசிக்கிறோம். ''பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மபணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்'' (1கொரி.16:1,2) என வாசிக்கிறோம். இங்கே கலாத்தியா மற்றும் கொரிந்துவிலிருந்த இரு சபைகளுக்கு வாரத்தின் முதல் நாள்தோறும் கொடுக்க அல்லது சேர்த்துவைக்கும்படி அறிவுறுத்தியிருக்கிறார். கொடுக்கும் மனநிலையைப் பற்றியும், எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பது பற்றியும், கொடுக்கும் நோக்கத்தைப் பற்றிச்சொல்லுவதற்கு அதிகமதிகமான ஆதாரங்கள் உண்டு, ஆனால் கொடுக்கும் செயல் வாரத்தின் முதல் நாள் தோறும் நடைபெற வேண்டியிருந்தது என்று இங்கே நாம் காண வேண்டியது முக்கியமான காரியமாகும். ஆச்சரியம் மற்ற நாளில் கொடுப்பதற்குப் பதிலாக வாரத்தின் முதல் நாளில் செய்யப்படவேண்டியது ஏன்? ஏனென்றால் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும்படி கூடிவரவேண்டிய வேதாகமத்தின் நாளானது இந்நாளே என்பது தெளிவாயிருக்கிறது. மேலும் அவர்கள் கூடிவந்திருந்த சமயத்தில், தங்களுடைய வருமானத்திலிருந்து கொடுப்பதற்கு அது ஒரு சிறந்த நாளாகவும் இருந்திருக்கும். அதே காரியம் தான் இன்றும் நடக்கிறது.

இவையெல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்ல, வாரத்தின் முதல் நாள் ஒரு பரிசுத்த நாளல்ல, ஓய்வுநாள் அநுசரிக்கப்பட்டது போல இது ஒரு ஓய்வுநாளல்ல, நிச்சயமாக இது ஓய்வுநாளல்ல, ஆனால் இது கர்த்தருடைய உயிர்த்தெழுதலினால் மகிமைப்படுத்தப்பட்ட நாள் மேலும் பரிசுத்த ஆவியின் வருகைக்கென்றும், முதல் முறையாக உண்மையிலே சுவிசேஷம் போதிக்கப்படுவதற்கென்றும் மேலும் சபை ஸ்தாபிக்கப்படுவதற்கென்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நாள் இது. இது மாத்திரமல்ல, இந்த நாள் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் கூடி ஆராதிக்கும்படி தெரிந்தெடுத்த

நாளாயிருந்தது. இப்படியிருக்கிறபடியினால் இது ஆராதனைக்குரிய வேதாகம நாள். நாம் புதியஏற்பாட்டில் வைக்கப்பட்டுள்ள திருஷ்டாந்தங்களைப் பின்பற்றவும், தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவரும்படிக்கும் தவறிழைக்கமாட்டோம். தவறு அந்தநாளில் கூடிவருவதை புறக்கணிக்கச் செய்யும். எபிரெய எழுத்தர் சபை கூடிவருதலை விட்டு விலகக்கூடாதென்று நம்மை உற்சாகப்படுத்துகிறார் (எபி.10:25). இது கிறிஸ்தவர்களாயிருக்கிற நமக்கு வாரத்தின் முதல் நாளிலே கூடிவரும் சந்தர்ப்பத்தோடே மகிமைப்படுத்தவும் அந்த நாளில் ஆராதிப்பதின் மூலம் நமது கர்த்தரை துதிக்கவும் அவர் நமக்கு ஏற்படுத்தியிருக்கிற இந்த நோக்கம் எவ்வளவு அற்புதமானது!

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக மற்ற கிறிஸ்தவர்களோடு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருகிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து வாசிக்கவும், கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவும், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவும் நாங்கள் ஜெபிக்கிறோம். இதை நீங்கள் செய்வீர்களென்றால், கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்வார். அப்போஸ்தலர் 2 ஐ வாசித்துப்பாருங்கள் அவர்கள் அதைச் செய்தார்களென்றால். நீங்கள் அதைச் செய்வீர்களென நாங்கள் ஜெபிக்கிறோம்.

தெரிந்து கொள்வோம்

துணுக்குகள் K.R.K.Ravi Asir

**▶ ஒரு மலையின் உயரம் என்பது கடல் மட்டத்திலிருந்து அந்த மலையின் உச்சிவரை உள்ள தூரமே. இமய மலைத் தொடர்கள் கடல் மட்டத்தில் இருந்து சராசரியாக 5கி.மீ உயரம் இருக்கின்றன. ஆண்டிஸ் மலைத் தொடர்கள் 4கி.மீ உயரம் உடையவை. மற்ற மலைகள் 2 முதல் 2.5 கி.மீ உயரம் உடையவை. உலகிலேயே மிக உயர்ந்த மலைச்சிகரம் எவரெஸ்ட் இது 8848 மீட்டர் உயரம் உடையது. பசிபிக் பெருங்கடலில் உள்ள ஹவாய் தீவில் காணப்படும் மவுனாகே மலைதான் அடிமுதல் முடிவரை 9000 மீட்டர் உயரம் உடையது.**

**அமெரிக்காவில் 1000 அல்லது அதற்கு அதிகமாகவும் இருந்தால் அவற்றை மலை என்றும் 500 அடி முதல் 999 அடிவரை உள்ள மலைகளைக் குன்று என்றும் அழைக்கின்றார்கள்.**

மலைகளே, சகல மேடுகளே... கர்த்தரைத் துதியுங்கள் சங்.148:9

தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். **9443558041**






## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்
## Evangelizing Our Friends
*-TVOTI*



**பாடம் - 2**

**- தொடர்ச்சி**

தேவன் ஆதாமையும் ஏவாளையும் உண்டாக்கியபோது அவர்களிடம் அவர்களுடைய வாழ்க்கையில் பாவம் இல்லை. தேவன் அவர்களுக்கு ஒரு கட்டளையைக் கொடுத்தார். **"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:16,17). இச்செயலின் விளைவினைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு, பாவம் பூமியில் பிரவேசித்து மரணம் எல்லாருக்கும் வந்தது என்கிறார். அவர் மேலும், "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" (ரோம.5:12) என்றார். உண்மை என்னவென்றால் பாவம் நமக்கு மரணத்தை சம்பளமாக தருகிறதே அல்லாமல் வேறொன்றையும் தருவதில்லை (ரோம.6:23).**

பாவம் என்றால் என்ன? பாவம் என்பது தேவன் நம்முடன் பேசாதிருக்கிறார், நமக்குத் தம்முடைய கட்டளையைக் கொடுத்திருக்கவில்லை என்பது போல செயல்படுவதாகும். அப்போஸ்தலனாகிய யோவான் **"பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (1யோவா.3:4)** என்றெழுதினார். பாவம் நம்முடைய வாழ்க்கைக்கென்று இருக்கிற தேவனுடைய சித்தத்திற்கு புறம்பாக செயல்படுகின்றது. நாம் ஏன் தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றாற் போல வாழவேண்டும்? ஏனென்றால், தேவனே நம்முடைய சிருஷ்டிகர், மேலும் அவரே தமது சிந்தையில் ஒரு நோக்கத்துடன் நம்மை உண்டாக்கினார்: அவரிடத்தில் அன்பு கூரவும் நமது நண்பரிடத்தில் அன்பு கூரவும் நம்மை சிருஷ்டித்தார். இதுவே முதலாம் மற்றும் இரண்டாம் கற்பனை என்று இயேசு சொன்னார். **"இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன்முழுஆத்துமாவோடும் உன்முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே" (மத்.22:37-39) என்றார்.** பாவம் தேவனுடைய அன்பின் (நோக்கத்திலிருந்து) திட்டத்திலிருந்தும் நமது நண்பரிடத்தில் அன்புகூராதபடிக்கு நம்மை விலகச்